# 11

# கொடுத்தல்



# GIVING

# 11

## எப்படிக் கொடுக்கக்கூடாது?

## HOW NOT TO GIVE

**1**

கொடுத்தலிலிருந்து வாழ்க்கையைப் பிரிக்கக்கூடாது.

**2**

தவறான வழிகளில் சம்பாதிக்கக்கூடாது.

**3**

அரசாங்கத்தை ஏமாற்றக்கூடாது.

**4**

மலிவான காணிக்கை கொடுக்கக்கூடாது.

**5**

அழுத்தங்களுக்கு இடங்கொடுக்கக்கூடாது.

**6**

கேள்விக்குரிய ஊழியர்களைத் தாங்கக்கூடாது.

**7**

பிரசங்கிமாரை வசப்படுத்தக் கொடுக்கக்கூடாது.

**8**

எளியவரை மறந்துவிடக்கூடாது.

**9**

கொடுப்பதைத் தம்பட்டம் அடிக்கக்கூடாது.

**10**

பெற்றுக்கொள்ளவே கொடுக்கக்கூடாது.

# 11

# எப்படிக் கொடுக்கக்கூடாது?

## அறிமுகவுரை

- மலைப்பிரசங்கத்தில் இயேசு போதித்த பக்தி முயற்சிகளில் முதலாவது பேசப்பட்டது **கொடுத்தல்**தான்! (மத் 6:1-4)

  இதற்குப் பிறகுதான் ஜெபத்தையும் உபவாசத்தையும்பற்றி அவர் போதித்தார் (வச 5-15, 16-18)

- கொடுத்தலில் ஓர் எழுப்புதல் உருவாகியுள்ளது. மழைக்காலத்தில் ''பயிரும்'' ''பதரும்'' வீரியமாய் வளர்வதுபோல், ஆன்மீக எழுச்சியின் காலங்களில் ஆரோக்கிய உபதேசத்தோடு துர்வுபதேசங்களும் தழைத்தோங்கும்.

  நாம் ''கொடுப்பது'' சரியாகவும் கடவுளுக்கு ஏற்புடையதாகவும் இல்லாவிடில், நமக்கு ஏற்படுவது இரட்டை இழப்பு —

  இங்கு நமது பணத்தை இழப்போம்!
  அங்கு நமது பலனை இழப்போம்!

- நமது தேவன் கொடுப்பவர்:

  பிதாவானவர் தமது குமாரனைக் கொடுத்துவிட்டார்.
  குமாரனானவர் தம்மையே கொடுத்துவிட்டார்.
  ஆவியானவர் வரங்களைக் கொடுக்கிறார்.

ஒருவர் இவ்விதம் கூறினார்:

கொடுத்தல் என்பது கடவுளின் பணம் திரட்டும் வழியன்று;
நம்மை அவரது குமாரன் போல் மாற்றுவதற்கான ஏது.

Max Lucado:

பணியெனும் கனியைப் பிழிந்தே
கொடுத்தலெனும் ரசத்தைப் பருகுகிறோம்;
கொடுக்கும்போதுதான் நமது இனிமை பொங்குகிறது.

## எப்படிக் கொடுக்கக்கூடாது?

### 1. கொடுத்தலிலிருந்து வாழ்க்கையைப் பிரிக்கக்கூடாது.
Do not separate life from giving.

■ ஊழியரும் ஊழியங்களும் பணம் திரட்டுவதில் தீவிரமாயிருப்பதால், கொடுப்பவர்களைப் பரிசுத்தமற்ற வாழ்க்கை குறித்துப் போதுமான அளவு எச்சரிப்பதில்லை —

''கொடுப்போரைப் புண்படுத்திவிடுவோமோ எனும் பயம்''

இயேசுவுக்கோ இவ்விதத் தயக்கம் இருந்ததில்லை —

(உ-ம்) *செல்வந்தன் ... ஒட்டகம்* (மத் 19:24)

''பரிசுத்தமாய் வாழ்தலும்'' ''கடவுள் ஏற்கும்படிக் கொடுத்தலும்'' பிரிக்க முடியாதவை —

எரே 6:19,20 ... விலையுயர்ந்த காணிக்கை ... கீழ்ப்படியாமை

*''உங்கள் சுகந்த பட்டை எனக்குச் சுகந்தமில்லை!''*

இது கொடுத்தலிலிருந்து பிரிக்கப்பட்ட வாழ்க்கை.

திருவசனத்தைக் கேளாதபடி நமது காதுகளை அடைத்தால்,

நமது ஜெபங்களும் அவருக்கு அருவருப்பு போல (நீதி 28:9),

நாம் திருவசனத்தைத் ''தள்ளினால்,''

அவரும் நமது **காணிக்கைகளையும்** ''தள்ளிவிடுவார்!''

■ கடவுளுக்குக் கீழ்ப்படியாதிருக்கும்போது, காணிக்கைகள் மூலம் அவரைப் பிரியப்படுத்த விரும்பும் இயல்பு நம்மிடமுண்டு!

(உ-ம்) சவுல் மன்னன்: கடவுளின் கட்டளை: 1 சாமு 15:3
சவுலின் கீழ்ப்படியாமை: வச 9
சவுலின் சாக்குப்போக்கு: வச 21
கடவுளின் கடிந்துகொள்ளல்: வச 22

காணிக்கைகளைவிடக் *''கீழ்ப்படிதலே உத்தமம்!''*

■ தேவனுக்குச் சுகந்தமான காணிக்கை எது? —

எபே 5:1,2 ... *கிறிஸ்து ... சுகந்த வாசனையான ... பலி*

:3 ... *வேசித்தனம் ... பொருளாசை*

இங்குதான் பிரசங்கிமாருக்குப் பெரும் பொறுப்பு.

(உ-ம்) பவுல் 2 கொரி 12:14 ... *உங்களுடையதை **அல்ல,***

***உங்களையே!***

என்னே சவால்!

இவ்விதப் போதனையினால்,
விசுவாசிகள் தங்களது முக்கியத்துவ வரிசையைச் சரிசெய்தனர்!

(உ-ம்) 2 கொரி 8:5 (மக்கெதோனியக் கிறிஸ்தவர்)

*''நாங்கள் நினைத்தபடி''* — எதிர்பார்த்தபடி / விரும்பியபடி

*''முன்பு கர்த்தருக்கும்''* — முந்துரிமை

*''**பின்பு** எங்களுக்கும்''* — அதுவும் தேவ சித்தத்தினாலே—

தங்கள் விருப்பு வெறுப்புகளின்படி அல்ல!

— உணர்ச்சிவசப்பட்டும் அல்ல!

■ திருவிருந்தில் பங்குபெறுமுன்

நம்மை நாமே ''சோதித்தறிவது'' போல,

எதையும் தேவனுக்குக் காணிக்கையாகப் படைக்குமுன்

நம்மை நாமே ''சோதித்தறிய''வேண்டும் —

மல் 3:3 ... *சுத்திகரித்து ... புடமிட்டு ... காணிக்கை*

■ தேவனோடு மட்டுமல்ல, மனிதரோடும் சரியாயிருக்கவேண்டும் —

மத் 5:23,24 ... *பலிபீடம் ... காணிக்கை ... முன்பு ஒப்புரவாகி*

**யார்** முதலடி எடுத்து வைக்கவேண்டும்?

மத் 5:23,24 ... *பாதித்தது நீங்கள்*

மத் 18:15 ... *பாதிக்கப்பட்டது நீங்கள்*

இரண்டு சந்தர்ப்பங்களிலும்,

**''நீங்களே''** போய் ஒப்புரவாகவேண்டும்!

அதாவது, காணிக்கை செலுத்த விரும்புபவர்!

இச்சத்தியம் மட்டும் மீண்டும் வலியுறுத்தப்பட்டால்,
நமது சபைகளில் ''நிதியை''விட ''நீதி'' பெருக்கெடுத்து ஓடும்!
(Riches vs. Righteousness)

(உ-ம்) 1 தீமோ 6:10 ... *பண ஆசை*
:11 ... *நீயோ ... நீதியை அடைய நாடு*

■ ஒரு கேள்வி எழலாம் —

குறைவேயில்லாதவர்களிடமிருந்துதான்
தேவன் காணிக்கைகளை ஏற்றுக்கொள்வாரா?
யாரும் பரிபூரணரில்லையே!

பதில்: தெரிந்த பாவங்களையெல்லாம் அறிக்கையிடுங்கள்.
கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்படுங்கள்.
எங்கெல்லாம் தேவையோ, சாத்தியமோ, அங்கெல்லாம்
ஒப்புரவாகுங்கள், சரி செய்யுங்கள்.

இவ்விதம் நாம் தேவனோடு **ஐக்கியமாய்** நடக்கலாம்.
அப்பொழுது, நமது காணிக்கைகள் தேவனது அங்கீகாரம்
மட்டுமல்ல, பாராட்டுதலும் பெறும்.

## 2. தவறான வழிகளில் சம்பாதிக்கக்கூடாது.
Do not earn by ungodly means.

- ஊழல் நிறைந்த சமுதாயத்தில் நாம் வாழ்கிறோம்.
  — அரசு மற்றும் தனியார் நிறுவனங்களில் ஊழல்
  — உலகிலும் சபையிலும்கூட ஊழல்
  — நற்செய்தி இயக்கங்கள், நிவாரண அமைப்புகளில் ஊழல்

  இன்னொரு சுனாமி வராதா என ஏங்கிக்கிடக்கும்
  முதலைகள் பக்திமார்க்க வட்டாரங்களில்!

  ஆனால் உலகின் போக்கிற்கு எதிரான தெளிவான நிலைப்பாட்டை இறைமக்கள் எடுக்கவேண்டும்.

  (உ-ம்) கள்ளத் தராசு, வெவ்வேறான எடைக்கற்கள் —
  நீதி 11:1 ... *கள்ளத் தராசு ... அருவருப்பானது.*

  — வாடிக்கையாளர்களை ஏமாற்றாதிருங்கள்.
  — உங்கள் சரக்குகள் குறித்த தவறான அபிப்பிராயம்.
  — இந்தியா நிர்ணயித்துள்ள தரங்களைவிட (I S I) நாம் சிறக்கவேண்டும்; இறையரசின் தரங்களே நமக்கு!
  — சுமாரான இலாபத்தில் திருப்தியாயிருங்கள்.
  — அத்தியாவசியத் தானியங்களைப் பதுக்காதிருங்கள்.
  நீதி 11:26... *சாபம்...கட்டிவைக்கிறவன்...ஆசீர்வாதம்...விற்பவன்*

- லஞ்சத்திற்கு எதிரான நிலைப்பாடு
  (உ-ம்) தாவீது
  சங் 26:10,11 ... *நானோ ... உத்தமத்தில் ...*

  எளியோரையும் நலிந்தோரையும் லஞ்சமானது பாதக நிலைக்குத் தள்ளுகிறது —
  ஏழைகளின் தேவன் துக்கப்படுகிறார்.

வரிக்காரரிடம் திருமுழுக்கினன் யோவான் —

லூக் 3:12,13

கேள்வி: *''நாங்கள் என்ன செய்யவேண்டும்?''*

பதில்: *''நியமித்ததற்குமேல் வாங்கக்கூடாது!''*

ஒருவேளை இக்கூட்டத்திலிருந்துதான் பேர்போன அந்த வரிக்காரன் மனந்திரும்பியிருக்கக்கூடும் —

சகேயு: *''நான்கு மடங்கு திருப்பிக் கொடுக்கிறேன்!''*

*இன்றைக்கு இவ்வீட்டுக்கு இரட்சிப்பு!* (லூக் 19:8,9)

பிரசங்கிமார் அடிக்கடி மக்களிடம் சொல்லும் வசனம் —

*''இன்று முதல் உங்களை ஆசீர்வதிப்பேன்!''*

ஆனால் பக்தியாய் வாழ்வதைக் குறித்த பேச்சேயில்லையே!

- ■ ஊழல்வாதிகளோடு பங்காளித்துவம்

  நீதி 1:10,14,15,19 ... *ஒரே பை ... பொருளாசை*

பணத்தைவிட உங்கள் சாட்சியே முக்கியம்.

- ■ கூலி கொடுப்பதில் தாமதம்

  உபா 24:14,15 ... *''அந்தந்த நாளில் கூலி கொடு''*

அவர்களுக்குக் கிடைக்கும் கொசுறு நன்மைகளைத் தடுக்காதீர்.

அமர்த்து! அதட்டு! அகற்று! — இம்மனப்பான்மை துன்மார்க்கம்.

கூலி கொடுப்பதைத் தாமதித்தாலோ, வேலையாட்களை ஏமாற்றினாலோ, ***சேனைகளின்*** *கர்த்தர்* உங்களுக்கெதிராய்ப் போராடுவார் —

யாக் 5:4 ... *பயங்கரம்! ... ''கூலியாளின் கூக்குரல்''*

- ■ கேள்விக்குரிய தொழில்கள் —

  லாட்டரி, மதுபானம் ...

  உபா 23:17,18 ... *விலைமாது ... நாய் ... அருவருப்பு*

  உங்கள் சேமிப்பை முதலீடு செய்வது எங்கே?

- ■ அளவுக்குமீறி வேலை: (overtime work)

  தியானம், ஊழியம், குடும்பத்திற்கு நேரமில்லாத நிலை —

நீதி 23:4,5 ... *செல்வந்தனாவதற்கு மிஞ்சிப் பாடுபடாதே ...*

■ நமது சபை ஆராதனைகள், கூட்டங்களில்,
காணிக்கைக்காய் ஜெபிக்கிறோம்.
தவறான வழிகளில் சம்பாதித்துக் கொடுக்கப்பட்ட
காணிக்கைகளை இந்த ஜெபம் **பரிசுத்தப்படுத்தாது!**

காணிக்கைத் தட்டு, பெட்டி அல்லது பையில் போடப்படு**முன்னரே**
அந்தப் பணம் சுத்தமானதாய் இருக்கவேண்டும்!

■ ஏற்கனவே நீங்கள் தவறான வழிகளில் பணத்தைக் குவித்துவிட்டால்,
இப்பொழுது என்ன செய்வது?

☐ முடிந்த இடங்களிலெல்லாம் காரியங்களைச் சரி செய்யுங்கள்.
எசேக் 33:15,16,17... *திரும்பக் கொடு... கொள்ளை... அநியாயம்*

☐ அந்தப் பணத்தை எளியவருக்கும்,
தேவையிலிருக்கும் ஆதரவற்றோருக்கும் பங்கிட்டுவிடுங்கள்.
(உ-ம்) சகேயு
லூக் 19:8 ... *பாதியை ஏழைகளுக்கு ...*
*நான்கு மடங்கு திருப்பிக் கொடுக்கிறேன்*
இதெல்லாம் தேவையில்லை என்றாரோ இயேசு?

## 3. அரசாங்கத்தை ஏமாற்றக்கூடாது.
Do not cheat the Government.

- ரோமக் கலாச்சாரமும் எபிரெயப் பழக்க வழக்கங்களும் ஒன்றுக்கொன்று வெகுவாய் **வேறுபட்டவை** —

சில இடங்களில் ஒன்றுக்கொன்று முரண்பாடாகவும் இருந்தன — எனவே பலவிதக் குழப்பங்கள்:

கிறிஸ்தவரல்லாதோர் vs. கிறிஸ்தவர்

□ ஆனால் பவுலோ *ரோம் நகர்ப் ''பரிசுத்தவான்களை''* அரசுக்கு அப்படியே கீழ்ப்படிய அறிவுறுத்தினான் (ரோ 1:2)

ரோ 13:1 ... *எவனும் ... தேவனாலன்றி அதிகாரமில்லை*

:2 ... *அதிகாரத்திற்கு எதிர்த்து நிற்கிறவன்*

காரணம்: விளைவுகள் அல்ல, *''மனச்சாட்சி!''* (வச 5)
நடைமுறைப் பயன்பாடு: வரிகள் + தீர்வை (வச 6,7)

□ அப்படியே பேதுருவும் —

*''ஆசியா, பித்தினியா, பொந்து, கலாத்தியா, கப்பதோக்கியா''*
ஆகிய நாடுகளில் வாழ்ந்தோருக்கு (1 பேது 1:1)

1 பேது 2:13,14 ...*''மனித அமைப்புகளுக்குக் கீழ்ப்படியுங்கள்''*

பேதுரு இன்று எழுதியிருந்தால், இப்படி எழுதியிருப்பான்:
''ஆசியா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா,
அமெரிக்காவில் உள்ளவர்களுக்கு ...''

குறிப்பாக இந்தியாவில்,
கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப்படுவது மட்டுமல்ல,
''பழிக்கவும்'' படுகிறார்கள் —
பேதுரு எழுதியதை வாசித்தோர் போல (வச 12)

இதன் பொருள் என்னவெனில்,
கிறிஸ்தவர்கள் வரி ஏய்ப்பைக் கனவிலும் நினைக்கக்கூடாது!

■ பேதுருவும் பவுலும் இதை எங்கிருந்து கற்றனர்?

— தங்கள் ஆண்டவராம் இயேசுவிடமிருந்தே!

(உ-ம்) மத் 17:24-27 ... இது ஆலய வரியைப் பற்றியது.

இடறல்களுக்கு ஆன்மீக வர்ணம் பூசக்கூடாது —

*''குமாரர் ... அந்நியர் ... விலக்கு ... இடறல்''*

அந்த ஆலயமே அவரது ''தந்தையின்'' வீடாயிருந்தும்!

— *''முதல்'' மீன் ...*

இதைப் போன்றே திட்டமான இன்னொரு சம்பவம் —

மத் 22:16-21 ... *இராயனுக்கு ... இறைவனுக்கு ...*
முதலாவது, *இராயனுக்கு!*
''தசமபாகம்'' குறித்து அவ்வளவு போதிக்கிறோம்;
''வரி செலுத்துவதைப்'' பற்றியோ?

இயேசுவும் அப்போஸ்தலரும் புதிய ஏற்பாட்டில்
ஒருமுறைகூட தசமபாகம் பற்றிப் போதிக்கவில்லை;
இன்றைய ஊழியருக்கோ அது அலாதிப் பிரியமான உபதேசம்.
இப்படித்தான் கிறிஸ்தவத்தில் முக்கியத்துவ வரிசை தொலைந்தது.

*கொசுவை வடிகட்டி*
*ஒட்டகத்தை விழுங்குகிறோம்!*

இவ்விதப் பிரசங்கிமாரை *''குருட்டு வழிகாட்டிகள்''* என்று
இயேசு அழைக்கிறார்! (மத் 23:24)

முதலில் வைக்கவேண்டியவற்றை மறக்கிறோம்,
கடைசியானவற்றையோ முதலில் வைக்கிறோம்!

■ காணிக்கைப் பெட்டியில் போட்டுவிடுவதால்
**கருப்புப்** பணம் **வெள்ளை**யாகிவிடாது;
மாறாக, அது ''வீணாகத்தான்'' போகிறது —
கடவுள் அப்பணத்தைத் தமது கணக்கில் ஏற்றுவதில்லை —

சபையின் கணக்குப் புத்தகம் vs. கடவுளின் பதிவேடு

வரிப்பணம் அரசுக்குச் சேரவேண்டுமென தேவனுக்குத் தெரியும்;
பிசாசுக்கும் அது தெரியும்!
தேவன் அதை ஏற்றுக்கொண்டால் பிசாசு குற்றஞ்சாட்டுவான்!

■ வரி மற்றும் சுங்க அதிகாரிகளிடம் சலுகைகள் கேட்கலாமா?

கேட்கலாம் — லஞ்சத்திற்கு இடமில்லையெனில்.
*''மனிதர் தயவு''* என்பது பைபிளுக்குப் புறம்பானதல்ல.

''ஊழியம்'' என்றுகூட,
நாம் வரி ஏய்க்கவோ, லஞ்சம் கொடுக்கவோ கூடாது.

கிறிஸ்தவ ஊழியரிடமிருந்து கிறிஸ்தவரல்லாத அதிகாரிகள்
கூடுதல் உயர்வான தரம் எதிர்பார்க்கின்றனர் —

□ எனது மனைவியும் நானும் முதல் வெளிநாட்டுப் பயணத்தில்
இருந்து திரும்புகையில், சுங்க வரி செலுத்தவேண்டிய
எலக்ட்ரானிக் பொருட்கள் பல கொண்டுவந்தோம்.
சுங்க வரி அதிகாரி கீழ்க்கண்ட கேள்வி கேட்டு
எங்களை நாணச் செய்தார் —

''பிரசங்கியாரென்றால் கூடுதல் கவனமாயிருந்திருக்கவேண்டுமே?''

□ வட இந்தியாவில் ஒரு மிஷனரி வங்கிக் கணக்குக்கு
விண்ணப்பித்தபோது, வங்கி அதிகாரி கணக்குக் கையேட்டில்
''தொழில்'' என்ற இடத்தில் அவராகவே ''செயின்ட்''
என்றெழுதிவிட்டார்!

ஆம், உலகிற்கு நாம்தான் *''உப்பு, வெளிச்சம்.''*

உங்கள் உப்புத்தன்மையையும் பிரகாசத்தையும் இழந்துவிடாதீர்!

*''உங்கள் வெளிச்சம் மனிதர்முன் ... பிதாவுக்கு மகிமை''*

(மத் 5:13-16)

## 4. மலிவான காணிக்கை கொடுக்கக்கூடாது.
Do not make cheap offering.

■ நாம் கொடுக்கும்போது,
**''எதைக்''** கொடுக்கிறோம் என்பதைவிட
**''எவருக்குக்''** கொடுக்கிறோம் என்பதைக் கவனிக்கவேண்டும்;
அப்பொழுதுதான் உசிதமானதைக் கடவுளுக்குக் கொடுப்போம் —
மல் 1:14 ... *''நான் மகத்துவமான ராஜா!''*

(உ-ம்) 1997இல் இங்கிலாந்து ராணி பட்டுகளின் நகராகிய காஞ்சிபுரம் வந்தபோது, நெசவாளர்கள் போட்டி போட்டுக்கொண்டு உயரிய பட்டுப்புடவைகளை அவருக்குக் கொடுக்க முன்வந்தனர் —

இராணியம்மையார் அவைகளை உடுத்துவாரா?
இல்லை, ஆனால் ''இராணிக்குக்'' கொடுப்பதில் அவர்களுக்கு ஆர்வம்!

இதோ கடவுளின் சவால் —
சாதாரண *''அதிபதி''* மலிவானவற்றை ஏற்பானா? (வச 8)

■ எடுத்துக்காட்டுகள் —
☐ ஆதி 4:3,4
ஆபேல் ... *மந்தையில் **கொழுத்தவற்றை** ...*
காயீன் ... *விளைந்ததில் **சிலவற்றை** ...*

☐ தாவீது: அவன் மக்களைத் தொகையிட்டபோது,
கொள்ளையை நிறுத்த ஒரு பலிபீடம் கட்டத் தீர்க்கன் கூறினான்.
அர்வனா கொடுக்க முன்வந்தது (2 சாமு 24:20-23).
தாவீதின் பதில் (வச 24)
— *இலவசமாய்ப் பெற்று* பலி செலுத்தமாட்டேன்!

இந்தக் களம்தான் மோரியா என்ற இடம்;
இங்குதான் ஆபிரகாம் மாபெரும் பலி செலுத்தினான். மட்டுமல்ல —

பின்னர் இங்குதான் சாலொமோன் ஆலயம் கட்டினான்.
தியாகக் காணிக்கையைத் தேவன் எவ்வளவாய்க் கனம்பண்ணுகிறார்!

☐ மக்கெதோனியக் கிறிஸ்தவர்:
2 கொரி 8:1-3
*...மிகுந்த தரித்திரம்...மிகுந்த உதாரத்துவம்... திராணிக்கு மிஞ்சி...*

அந்த ஏழை விதவையை இங்கு நினைக்கிறோம் —
மாற் 12:41-44 ... மக்கள் காணிக்கை போடுகிறதை
*இயேசு கவனித்துக்கொண்டிருந்தார்*

எவ்வளவு **''கொடுக்கிறோம்''**
என்பதை உலகம் பாராட்டுகிறது;
எவ்வளவு **''வைத்துக்கொள்கிறோம்''**
என்பதை உன்னதர் பார்க்கிறார்!

வேறு வார்த்தைகளில் — ஆண்டவர் ''விகிதத்தைப்'' பார்க்கிறார்.
நாம் செல்வந்தராயிருந்தும் எளியவர்போல் தசமபாகம் மட்டும்
கொடுத்தால், நமது காணிக்கை மலிவானது.

செல்வந்தர் *கொடுப்பதிலும் செல்வந்தராகணும்* (1 தீமோ 6:17-19)

— தசமபாகம் எளியவருக்கு ஓர் அளவாயிருக்கலாம் —
அதாவது, அன்றாடக உணவுகூட இல்லாதோர்க்கு.

■ தனக்கிருந்த இரண்டே ஆடுகளில் வியாதிப்பட்டதைத்
தனக்கு வைத்துக்கொண்டு நல்லதையோ காணிக்கையாக,
மிஷனரிப் பணிக்களமொன்றில், ஓர் எளிய ஆதிவாசிப் பெண்
கொண்டுவந்தாள். இதைப் பார்த்த நான் அதிர்ந்துபோனேன்!

■ தியாகச் செம்மல்களின் சரிதைகளால்
மிஷனரிச் சரித்திரம் நிறைந்துள்ளது —
(உ-ம்) C. T. ஸ்டட் (1862-1931)
கோடீஸ்வரரான தனது தந்தையிடமிருந்து சுதந்தரித்த
எல்லாவற்றையும், தனது மணப்பெண்ணுக்காய்
வைத்திருந்ததையும்கூட, கொடுத்துவிட்டார்.

அவர் சொன்னது —

''கிறிஸ்து எனக்காய் மரித்திருப்பாரானால்,

அவருக்கான எனது தியாகம் எதுவும் பெரிதல்ல!''

(அவரது ஒரு செய்யுள்: பக்கங்கள் 790-791)

■ உங்களைப் பாதிக்கிற அளவுக்கு எப்பொழுதாவது கொடுத்திருக்கிறீர்களா?

கடைசியாய் எப்போது தியாகக் காணிக்கை கொடுத்தீர்கள்?

■ கொடுத்தலில் ஓர் **எழுப்புதல்** வராதா?

(உ-ம்) யாத் 35:4,5 ... *அழைப்பு* ... *மனமுள்ளவன்* ...

:21,22 ... முன்வந்தோர்

*''ஒவ்வொருவரும்''* (வச 21,22,23,24,25,26, ...)

பழைய ஏற்பாட்டினரை நாம் மிஞ்சவேண்டாமா?

உங்களுக்கருமையானதொன்றைக்

கடவுளுக்குக் கொடுத்துவிட இன்றே தீர்மானிப்பீர் —

ஒரு நகை/ஒரு வைப்புத் தொகை/ஒரு சொத்து?

அவர் ***பாத்திரர்*** அல்லவா?

## 5. அழுத்தங்களுக்கு இடங்கொடுக்கக்கூடாது.
Do not yield to pressures.

- பிரசங்கிமார் மற்றும் ஊழியங்களிலிருந்து பணம் கேட்டுவரும் வேண்டல்களினால் கிறிஸ்தவருக்கு எப்பக்கமும் நெருக்கம்!

  ''வெளியிலிருந்து வரும் அழுத்தத்தினால்'' அல்ல,
  ''உள்ளார்ந்த அசைவினாலேயே'' நீங்கள் கொடுக்கவேண்டும்.

  பிரச்னைகள், நெருக்கடிகள் வழியாய் நாம் செல்லுகையில்
  இவ்வித அழுத்தங்களுக்கு எளிதில் பலியாகிவிடுகிறோம் —

  (உ-ம்) மரணப்படுக்கையிலிருந்த ஒரு விதவையும் இரு ஊழியரும் —
  ''இரு கள்ளர் நடுவில் சிலுவையில் அறையப்பட்ட உணர்வு!''

  யாரும் உங்களை வசப்படுத்த இடங்கொடாதீர்!

  இயேசுவின் காலத்தில் ஏமாற்றும் பழக்கம் —
  *வேதபாரகர் ... விதவைகள்* ... மாற் 12:40
  அடுத்த பகுதியிலேயே (வச 41-42) ... *ஏழை விதவை*

- இரங்கல் வேண்டல்களுக்கு எச்சரிக்கை! (sympathy appeals)
  பிரசங்கிமார் வழக்கமாய்ச் சொல்லுவது:
  ''எனக்குக் கடன் தலைக்குமேல் ஏறிவிட்டது!
  நீங்கள் உடனே பணம் அனுப்பாவிடில்
  இந்நிகழ்ச்சியை நிறுத்தவேண்டியதிருக்கும்!''

  மக்கள் மனதில் ஒரு ''பாரத்தை'' உருவாக்கவேண்டுமேயன்றி,
  ''பரிதாபவுணர்வைத்'' தோற்றுவிக்க முயலக்கூடாது.

  பவுல் ஒருபோதும் மக்களது பரிதாபத்தை நாடவில்லை —
  பிலி 4:10-13 ... *பட்டினி ... குறைவு ... துன்பம்* ...
  அதாவது, ''பயணத்திற்குப் பணமில்லையேல்,
  அறைக்குள் மன்றாட்டு ஊழியம் செய்வேன்!''

''உணவு இல்லையேல் பட்டினி அல்ல;
அது உபவாசித்து ஜெபிக்க ஒரு வாய்ப்பு!

மக்களின் பணத் தேவைகளுக்காக அவர்கள் தேவனை
விசுவாசிக்கவேண்டும் என்று பிரசங்கிமார் அடித்துப் பேசுவர் —
இதே விசுவாசத்தைப் பிரசங்கிமார் தங்களுக்கே
அப்பியாசித்தாலென்ன?

''கொடுங்கள் ... வானம் திறக்கும்'' என்று கத்துவர்!
பிரசங்கிமாரே, நீங்கள் அதைச் செய்யுங்களேன்!

எளிய முறையில் தேவைகளை அறிவிப்பது சரிதான் —

(உ-ம்) ஆசரிப்புக் கூடாரத் தேவைகளுக்காய் மோசே (யாத் 35)
(உ-ம்) எருசலேமின் பரிசுத்தவான்களுக்காய்ப் பவுல்.
தனது முன்னிலையில் காணிக்கை எடுப்பதைக்கூட
பவுல் விரும்பவில்லை! 1 கொரி 16:1,2
(பிரசங்கியார் கையில்தான் காணிக்கை கொடுக்கவேண்டுமோ?)

■ **கொடுங்கள்** என்று மக்களிடம் ஊழியர் கெஞ்சக்கூடாது —
**வாங்குங்கள்** என்று ஊழியரை மக்கள் வற்புறுத்தவேண்டும் —
2 கொரி 8:3,4 ... *மிகவும் வேண்டினர் ...*
*''போதும் நிறுத்துங்கள்!''* (யாத் 36:5-7)
என்று பிரசங்கிமார் சொல்லக்கூடிய நிலை வேண்டும்!

நமது அறிவிப்புப் பலகைகளிலும், செய்தி மடல்களிலும்
இப்படியெல்லாம் அறிவிப்புகள் வராதது ஏனோ?

எப்பொழுதும், ''கொடுங்கள், கொடுங்கள்'' என்றுதான்;
ஒருபோதும், ''நிறுத்துங்கள், நிறுத்துங்கள்'' என்றல்ல!

ஒரு காரணம்:
இறைமக்களுக்குக் கொடுத்தலைப் பற்றிப் **போதிப்பதைவிட,**
தங்கள் திட்டங்களுக்குப் பணம் **திரட்டுவதிலேயே** ஊழியர்க்கு ஆர்வம்.

— அனுபவ சாட்சி: ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தில் (BYM) நான்
33 ஆண்டுகள் (1971-2003) நிர்வாகத் தலைவனாயிருக்கும்போது
பணம் திரட்டுவதைவிட இறைமக்களுக்குக் ''கொடுத்தலைப்''
போதிப்பதிலேயே கவனம் செலுத்தினேன்.

நாங்கள் எதிலும் குறைவுபடவில்லை.
''நிறுத்துங்கள், போதும்'' என்றும்கூட சொல்லியிருக்கிறோம்!

- பிரசங்கிமாரின் **அழுத்தங்களினால்** மட்டுமல்ல;
எந்தப் பிரமாணத்தின் **கட்டாயத்தினாலும்** கொடுக்கக்கூடாது!

தசமபாகம்: பழைய ஏற்பாட்டின் ஒரு பிரமாணம்.
தங்கள் நிருபங்கள் எதிலும் தசமபாகம் குறித்து
அப்போஸ்தலர் போதிக்கவில்லை —

புதிய ஏற்பாட்டில் ... *''கட்டாயத்தினாலோ,''* வற்புறுத்தலினாலோ,
கணக்கின்படியோ அல்ல; *''உற்சாகத்துடன்!''*
2 கொரி 9:5ஆ ... *''உதாரத்துவம் ... கடமை என்றல்ல''*
:7 ... *''உற்சாகம் ... கட்டாயம் என்றல்ல''*

சட்டத்தை மீறுகிறவர்களுக்கே சட்டம்.
அது ஆரம்ப நிலையிலுள்ளவர்களுக்கு.
அது *''கிறிஸ்துவிடம் கூட்டிச்செல்லும் வழித்துணை,''*
அவ்வளவுதான் (கலா 3:24-26)
இப்பொழுது நாம் *''புத்திரர்''* (வச 26).
தந்தைக்கும் பிள்ளைகளுக்குமிடையே
சட்டமல்ல, சரளம்!

தசமபாகத்தில் துவங்கலாம் — அதில் நின்றுவிடக்கூடாது!
பத்தில் ஒன்று பத்தில் பத்தாகிட நாம் வளரவேண்டும்.

இல்லையேல் —
*''இயேசுவுக்கே ஒப்புவித்தேன், யாவையும் தாராளமாய்''*
என்றெல்லாம் பாடுவது அர்த்தமற்றது!

## 6. கேள்விக்குரிய ஊழியர்களைத் தாங்கக்கூடாது.
Do not support questionable ministers.

■ ஒரு காலத்தில் திரையுலகில்தான் கொள்ளை லாபம்;
அடுத்து அது அரசியல் என்றிருந்தது;
இன்றோ அது மார்க்கம் என்றாகிவிட்டது!

1 தீமோ 6:5 ... *தேவ பக்தியை ஆதாயத் தொழிலாய் ...*
*இப்படிப்பட்டோரை விட்டு* ***விலகு!***

■ கேள்விக்குரிய ஊழியர் **யார்?** அவர்கள் 4 வகையினர் —

### (அ) பொருளாசை பிடித்த ஊழியர்

பிரசங்கபீடமோ பத்திரிகையோ
எதையும் பணம் திரட்டவே பயன்படுத்துவர் —
*அவர்கள் "பூமிக்குரியவைகளையே" சிந்திக்கின்றனர் ...*
அவர்கள் *வயிறுதான் அவர்கள் கடவுள்!* (பிலி 3:17-19)
(சோறு கண்ட இடம் சொர்க்கம்!)
கிறிஸ்துவுக்கு அல்ல, *கிறிஸ்துவின் "சிலுவைக்குப்" பகைவர்.*

திருப்பணியில் பல "தீங்குகள்" இருக்கின்றன;
எல்லாவற்றிற்கும் *"வேரோ" பண ஆசைதான்* —
*"தேவ மனிதரோ"* (= திருத்தொண்டரோ) இதைவிட்டு
ஓடிவிடவேண்டும் (1 தீமோ 6:10,11)

ஒரு பிரசங்கியாக உருவெடுத்துக்கொண்டிருந்த
தீமோத்தேயுவைப் பவுல் இவ்விதம் எச்சரித்தான்.

ஊழியரே, *"கடவுளையும் காசையும் சேவிக்க முடியாது!"* (லூக் 16:13)
அப்படியானால், திருப்பணியாளர் எவரிடமும்
பணம் இருக்கக்கூடாது என்பது பொருளல்ல —

அப்போஸ்தலருக்கே எவ்வளவோ கிடைத்தது!
ஆனால் பணம் அவர்கள் பாக்கெட்டில் அல்ல, பாதத்தில்! (அப் 4:34-37)

*''வெள்ளியும் பொன்னும்* ***என்னிடம்*** *இல்லை''*

என்று பேதுருவால் சொல்ல முடிந்தது (அப் 3:6)

பில்லி கிரகாம் சொன்னது —

''பணக்காரியங்களில் மனப்பான்மை சரியாகிவிட்டால்,
வாழ்வின் பிற பகுதிகள் யாவும் செம்மையாகிவிடும்!''

**(ஆ) கணக்கொப்புவிப்பு இல்லாத ஊழியர்**

''கடவுளுக்குமுன் உண்மையாயிருக்கிறேன்; வேறென்ன?''
இவ்விதப் போக்கு திருமறைக்கு முரணானது.

— அப்போஸ்தலரின் முன்மாதிரி (2 கொரி 8:20,21)

''*கர்த்தருக்குமுன் மட்டுமல்ல, மனிதருக்கு முன்பும் யோக்கியமானவை*''

— இயேசுவானவர் பணத்தைத் தம்மிடம் வைத்திருக்கவில்லை; அது யூதாசிடம் இருந்தது (யோ 13:29).

நமது சாக்குப்போக்கு: ''நம்பகமான ஆள் கிடைக்கவில்லையே!''

உங்கள் பணத்தோடு யாரும் ஓடிவிடலாம்,
உங்கள் ஊழியத்தையோ திருட முடியாது; பணத்தைத் திருடி ஓடுகிறவன் தன்னையே அழித்துக்கொள்வான்!

**(இ) உபதேசத்தில் திசைகெட்ட ஊழியர்**

''எனது காணிக்கையை நான் கொடுத்த பின்னர்
அதற்கு நான் பொறுப்பல்ல'' என்று சொல்லக்கூடாது.

2 யோ 9-11 ... *இந்த உபதேசத்தைக் கொண்டுவராதவனை ஏற்றுக்கொள்ளாதீர்*

நிதானிக்கவேண்டியது உங்கள் பொறுப்பு —

**ஞானமாய்ப்** பணத்தைப் பயன்படுத்துவீர்களென்று எண்ணியே ஆண்டவர் அதை உங்கள் கைகளில் தந்துள்ளார்.

— அதற்கேற்றவாறு நடந்துகொள்வதே நல்ல உக்கிராணத்துவம்.

உபதேச வழிவிலகலைக் கண்டறிய சில கேள்விகள் —

☐ அவர் பிரசங்கிக்கும் இரட்சிப்பு
கிறிஸ்து முடித்த பிராயச்சித்தத்தின் மீதுள்ள
விசுவாசத்தினாலேயா, சொந்த நற்செயல்களாலேயா?

☐ செய்திகளில் கிறிஸ்துவை உண்மையாகவே உயர்த்துகிறாரா,
தன்னைப் பற்றியே தம்பட்டம் அடிக்கிறாரா?

☐ அவர் போதிப்பது திருமறையா, மற்ற வெளிப்பாடுகளும்,
உணர்ச்சிவச அனுபவங்களுமா?

**(ஈ) சொந்த சாம்ராஜ்யங்கள் கட்டும் ஊழியர்**

இறையரசைக் கட்டுவதற்குப் பதிலாக!

(உ-ம்) அந்தஸ்து —

பெரிய கட்டிடங்கள், பிரமாண்டமான திட்டங்கள் —
ஆவியானவரால் நடத்தப்படாதவை.
*''**உனக்குப்** பெரிய காரியங்களைத் தேடுகிறாயோ?
தேடாதே!''* (எரே 45:5அ)

பல தலைமுறைகளுக்குச் செல்வம் சேகரிப்பு.

ஜான் வெஸ்லி (1703-1791): ''10 பவுண்டுக்குமேல் பணத்தை
நான் விட்டுச்சென்றால், நான் திருடனாகவே மரித்தேனென்று
மனுக்குலமே பேசட்டும்!''

■ கொடுப்பதில் பாதுகாப்பான வழி:

(அ) உள்ளூர்ச் சபைகளுக்கு
(ஆ) ஊழியச் சங்கங்களுக்கு

ஒரே ஊழியத்திற்குக் கொடுப்பதைவிடப்
பலருக்குப் பகிர்ந்து கொடுப்பது மேல் —
பல்வேறு வங்கிகளில் சேமிப்பது போல!

அதாவது, நடுகிற பவுலுக்குக் கொடுங்கள் (மிஷனரிகள்)
நீரூற்றுகிற அப்பொல்லோவுக்குக் கொடுங்கள்
(மேய்ப்பர்கள்)
பெயர்க் கிறிஸ்தவரிடம் போகும் பேதுருவுக்குக்
கொடுங்கள் (எழுப்புதல் ஊழியர்)

கண்மூடித்தனமாய்க் கொடுத்துப் பிரசங்கிமாரைப் பாழாக்காதீர்!

## 7. பிரசங்கிமாரை வசப்படுத்தக் கொடுக்கக்கூடாது.

Do not give to influence preachers.

- மார்க்கவுலகு இன்று பெருமளவில் வணிகமயமாகிவிட்டது.
சமுதாயத்தின் பொதுவான துறைகளில் மட்டுமல்ல,
ஆன்மீக வட்டாரங்களிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது.

இவ்வித நிலைமையை முன்னறிந்த இயேசு,
பன்னிருவரை அனுப்புகையில், சொன்னது —

மத் 10:7,8 ... *பிரசங்கியுங்கள் ... குணமாக்குங்கள் ...*
*இலவசமாய்ப் பெற்றீர்கள் ... இலவசமாய்க் கொடுங்கள் ...*

பகட்டு வரங்களுள்ள பிரசங்கிமார்
மற்றவரைவிட இங்கு கூடுதல் கவனமாயிருக்கவேண்டும்!

- ''சிறப்புக்'' காணிக்கைகளுக்குச் ''சிறப்பு'' ஜெபங்கள் வாக்களிக்கும்
பிரசங்கிமாருக்கு எச்சரிக்கை!

நிர்ப்பந்தத்திலிருப்போர் இவ்வலையில் விழுந்துவிடுகின்றனர் —

மத் 23:14
விதவைகளின் பணப்பையைக் காலியாக்கியபின்
*''நீண்ட''* (= விசேஷித்த) *ஜெபங்கள்.*

கடவுள் ஒன்றையும் நமது தகுதியின்படியல்ல,
அவரது தனம் மற்றும் தயவின்படியே தருகிறார்.

*சொந்தக் குமாரனையே கொடுத்துவிட்டாரே!*
*மற்றெல்லாவற்றையும் இலவசமாய்த் தராதிருப்பாரோ?*
(ரோ 8:32)

ஒரு பழமொழி:
''சாமி வரம் கொடுத்தாலும் பூசாரி மாட்டேங்கிறானே!''

■ காணிக்கைகளால் பிரசங்கிமாரை வசப்படுத்த விழைவது
கடவுளுக்கு விரோதமான பாவம்.

(உ-ம்) அப் 8:17-24 ... *சீமோன் ... மந்திரவாதி ... பேதுரு ...*

- ☐ *''உன் பணம் உன்னோடு நாசமாய்ப் போகட்டும்!''*
- ☐ *''உன் இருதயம் செம்மையாயில்லை!''*
- ☐ *''உன் துர்க்குணம்!''*
- ☐ *''கசப்பான நஞ்சு உனக்குள் ஏறியிருக்கிறது!''*
- ☐ *''பாவக் கட்டில் அகப்பட்டிருக்கிறாய்!''*

— *''உன் பணம் உன்னோடு நாசமாய்ப் போகட்டும்!''*
இது கொடுப்பவரைக் குறித்தது.
வாங்குகிறவர்மீதும் கடவுள் சினங்கொள்கிறார்.

(உ-ம்) 2 இரா 5:25-27
எலிசா ... நாகமானின் வெகுமதிகளை ஏற்க மறுக்கிறான்.
*கேயாசியோ ... அதே குஷ்டம் ... சந்ததிகளுக்கு ...*

■ அப்படியானால் நமக்காக ஜெபிக்கும் ஊழியருக்கு
நாம் காணிக்கை கொடுக்கக்கூடாதா?

அப்படியல்ல, நமது உள்நோக்கம் என்ன?

(உ-ம்) சொப்பனத்தை அர்த்தப்படுத்திய **பிறகு** தானியேலுக்கு
நேபுகாத்நேச்சார் வெகுமதியளித்தான் (தானி 2:47,48)
**— ஏற்கப்பட்டது**

சுவற்றில் எழுதப்பட்டதை அர்த்தப்படுத்தத் தானியேலை
ஈர்ப்பதற்காய்ப் பெல்ஷாத்சார் கொடுக்க முன்வந்தது
(தானி 5:16,17) **— மறுக்கப்பட்டது**

■ இன்றைய இப்பழக்கம் **உபதேசக்** கோளாறினால் வந்தது —
*''ஒருவருக்காயொருவர் ஜெபியுங்கள்''* — இதைத் தவறாய்ப் புரிதல்.
மக்களுக்காய் ஊழியர் ஜெபிக்கவேண்டும் ...
ஊழியருக்காய் மக்கள் ஜெபிக்கவேண்டும்!

எவரும் எவருக்காகவும் ஜெபிக்கலாம்;

ஆனால் ஒருவரும் நடுவராக முடியாது (1 தீமோ 2:5)

*“ஆகையால்” ... எல்லாரும் ... எங்கும் ... ஜெபியுங்கள்* (வச 8)

பழைய ஏற்பாட்டில்,

மனிதருக்காய் ஆசாரியர் தேவனிடம் ஜெபித்தனர்.

புதிய ஏற்பாட்டில்,

தேவனுக்காய்த் தூதுவர் மனிதரிடம்
மன்றாடுகின்றனர் (2 கொரி 5:20)

*பழையன ஒழிந்தன! எல்லாம் புதிதாயின!* (வச 17)

## 8. எளியவரை மறந்துவிடக்கூடாது.

Do not neglect the poor.

■ இல்லாதோர்க்குக் கொடுப்பதைவிட இறைப்பணிக்குக் கொடுப்பது உயர்ந்தது என்பது நமது பொதுவான எண்ணம் —

திருமறையோ அப்படிப் போதிக்கவில்லை —

மத் 23:23 ... *நியாயப்பிரமாணத்தில் ''விசேஷித்தவை''*

*நீதி ... இரக்கம் ... நம்பகம்*

அதாவது, தசமபாகம் செலுத்துவதைவிட தானதர்மம் **விசேஷித்தது!**

இதுவே ஏசாயாவின் குற்றச்சாட்டும் —

ஏசா 1:15 ... *ஜெபங்கள் ... என் முகத்தை மறைக்கிறேன் ...*

:16,17 ... ஏன்?

திக்கற்றோர், எளியோர்மீது கரிசனையின்மை

அதுவே பிரதான பாவம்: வச 18 ... *பாவங்கள் ... கடுஞ்சிவப்பு ...*

''ஜெபித்தலையும்'' ''உபவாசித்தலையும்'' போதிக்குமுன்

ஆண்டவர் ''கொடுத்தலைப்'' போதித்தார் —

மத் 6:2 ... *தானதர்மம்*

:5 ... *ஜெபம்*

:16 ... *உபவாசம்*

நான் அடித்துச் சொல்வது —

தசமபாகம் செலுத்துவதைவிடத் தானதர்மம் முக்கியமானது!

ஏனெனில்,

''தசமபாகம்'' கடவுளுக்குக் கொடுக்கும் ''காணிக்கை;''

''தானதர்மமோ'' அவருக்குக் கொடுக்கும் ''கடன்!'' (நீதி 19:17)

■ யேகோவா தேவனின் பெயர்களில் ஒன்று —

*''ஏழைகளின் தேவன்''*

சங் 10:14ஆ ... *திக்கற்ற பிள்ளைகளுக்குச் சகாயர்*

68:5 ... *திக்கற்ற பிள்ளைகளுக்குத் தந்தை ...*

*விதவைகளைக் காக்கிறவர்*

எளியவருக்குக் கொடுப்பது நமது விருப்பு வெறுப்பைப் பொறுத்ததல்ல, அது கட்டாயம் —

கொடாதிருப்பது ***"பாவம்"*** (உபா 15:7,8,9)

*"உன் கையைத்* ***தாராளமாய்த்*** *திறந்திடு"*

இதுதான் **"உற்சாகமாய்க்"** கொடுத்தல் என்பது —

2 கொரி 9:7 ... *உற்சாமாய்க் கொடுக்கிறவன் ... கடவுள் பிரியம்*

நாமோ எளியவருக்கு நேரடியாய்ப் பயன்படாத ஆலயத் திட்டங்களுக்கே இவ்வசனத்தைப் பயன்படுத்துகிறோம் —

சூழமைவு: வச 1,9,12 ... *தர்ம சகாயப் பணி ...*

■ இயேசுவின் போதனை இங்கு தெளிவு, கண்டிப்பு —

☐ *"இறையரசைத் தேடுங்கள் ... விற்றுக் கொடுங்கள் ... விண்ணில் பொக்கிஷம்"* லூக் 12:31,33,34

(இவ்வசனப்பகுதி மலைப்பிரசங்கத்தைப் போன்றது.)

☐ அந்தப் பணக்கார இளம் வழக்கறிஞனுக்கும் இதே போதனை —

மத் 19:16-22

*"பூரணனாக விரும்பினால் விற்று எளியவர்க்குக் கொடு"*

☐ *"எளியவருக்கு விருந்து கொடுங்கள்"* —

லூக் 14:12-14

☐ செல்வந்தனும் லாசருவும் (லூக் 16:19-31)

அவனது ஒரே பாவம்: செய்யவேண்டியதைச் செய்யாதது — லாசருவைப் பராமரிக்கத் தவறியது

■ எளியவருக்கு எவ்வளவுதான் கொடுக்கவேண்டும்? —

திருமுழுக்கினன் யோவானைக் கேளுங்கள்:

50 சதவீதம் என்பான்! (லூக் 3:10,11)

இங்கு தவறுவது கடவுளுக்குமுன் கொடூரம் —
எசேக் 22:29 ... *எளியவனை ஒடுக்கி*
:30 ... *அழிக்காதபடி ... திறப்பில் நிற்பவன் ...*

— எனவேதான் இயேசு அவனது வீட்டு வாசலுக்கு வந்ததும்
சகேயு இவ்விதம் சொன்னான் —
*"பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன்!"* (லூக் 19:1-10)
திருமுழுக்கினன் பிரசங்கத்தை நினைத்திருப்பானோ?

இன்னொரு தசமபாகம் கொடுத்தாலென்ன?
நிவாரண நிறுவனங்களுக்கும்
கருணை இல்லங்களுக்கும் கொடுங்கள்.

ஆதி நாட்களில் திருச்சபையே
விதவைகளையும் அனாதைகளையும் பராமரித்துவந்தது —
(உ-ம்) *கிரேக்க விதவைகள்* (அப் 6)

இன்றோ, திருச்சங்கங்களே பெரும்பாலும் இத்தொண்டினை
நிறைவேற்றுகின்றன. அவர்களுக்கு உதவுங்கள்.

அதே வேளையில், **உங்கள் வாசலில்** கிடக்கும்
லாசருவை மறந்துவிடாதீர்!

- *சுத்தமான பக்தி எது?*
  யாக் 1:27 ... *திக்கற்றோரை விசாரித்தல் ... கறைபடாதிருத்தல்*

இந்த நிருபத்தில்தான் கடுமையான ஒரு கூற்று —
*"செயலற்ற விசுவாசம் செத்தது!"* (2:17)

அதாவது, தானதர்மச் செயல்களில்லாது ஆன்மீகக் காரியங்கள்
மட்டுமே அடங்கிய மார்க்கம் செத்தது!

(*"Christianity is Charity!"* என்ற எனது ஆங்கிலக் கட்டுரையை
*"StanleyOnBible.com"* என்ற இணையதளத்தில் வாசியுங்கள்.)

(பார்க்க: பக்கங்கள் 34-37, 248-250, 560-562, 571-610)

## 9. கொடுப்பதைத் தம்பட்டம் அடிக்கக்கூடாது.

Do not publicize your giving.

- கொடுப்பது குறித்து இயேசுவின் முதல் போதனையே இதுதான் —
  அதை விளம்பரப்படுத்தாதே! மத் 6:2-4

நாம் செய்யக்கூடாத மூன்று காரியங்கள் —

(அ) சபையில் பிரபலப்படுத்தாதே: *"ஆலயங்களில்"* (வச 2)

(ஆ) சமுதாயத்தில் பிரகடனப்படுத்தாதே: *"வீதிகளில்"* (வச 2)

(இ) உனக்குள்ளேயே பெருமைப்படாதே:
*"வலது கை... இடது கை"* (வச 3)

ஆலய இருக்கைகள், மேசைகள், மின் விசிறிகள், தட்டுமுட்டுச் சாமான்களிலெல்லாம் கொடுப்பவரின் பெயர்களை எழுதுவது கடவுளின் பார்வையில் அருவருப்பு!

குழல் விளக்குகளில்கூட! ... ஒளியையே குறைப்பதா?

ஆசரிப்புக் கூடாரம் அல்லது ஆலயக் கட்டிடத்தில் இவ்விதப் பழக்கம் இருந்ததாக நாம் வாசிப்பதில்லை!

பழைய ஏற்பாட்டிலேயே அவர்கள் செய்யவில்லையே!
புதிய ஏற்பாட்டில் இதைக் கற்பனை செய்யவும் முடியாதே!

- திருமறைக்குப் புறம்பான இவ்விதப் பழக்கங்களுக்கு மக்களைவிட ஊழியர்தான் முக்கிய காரணம் —

பிரசங்கிமார் பிரமாண்டமான கட்டிடங்களைக் கட்டுகையில், பெருந்தொகை அளிப்போரின் பெயர்கள் அறைகளில் பொறிக்கப்படும் என்கின்றனர்!

இப்படியா பைபிள் போதிக்கிறது?

செல்வந்தன் ஒருவன் ரூ. 1,00,000/- கொடுக்கலாம்
— அவனுக்கு இருப்பதில் இது ஒன்றுமேயில்லை.

அந்த *''ஏழை விதவை''* கொடுத்ததோ 100 சதவீதம்!

யாருடைய பெயர் பொறிக்கப்படுகிறது?

யாரைக் கடவுள் பாராட்டுகிறார்?

பிரசங்கிமாரின் இத்தகைய வாக்குறுதிகளெல்லாம்

மக்களை வஞ்சித்து இழுக்கவே!

கவனம்! இவ்வித வாக்குறுதிகள் தரும்

எந்த ஊழியனுக்கும் ஒன்றும் கொடுக்காதீர்!

அவன் ஏமாற்றும் வியாபாரி!

- விளம்பரம் வேண்டுமென்ற இரகசிய ஆசை வேண்டவே வேண்டாம். மக்களுக்குத் தெரிந்தவைகளை அவர்கள் பாராட்டட்டும்; நீங்களோ மறைந்து, பணிவாகவே செயல்பட முயலுங்கள்.

(உ-ம்) நூற்றுக்கதிபதி (லூக் 7:1-7)

அவன் பாத்திரன் என்று **மக்கள்தான்** சொன்னார்கள்;

அவன் சொன்னதோ —

*''உம்மிடம் வரவும் நான் பாத்திரனல்ல!''*

- அதிகம் கொடுத்ததாக மக்கள் மனதில் **பதிக்கவேண்டுமென்பதே** அனனியா-சப்பீராளின் ஆசை!

இல்லையேல் ஒன்றும் கொண்டுவந்திருக்கவேண்டியதில்லையே.
எல்லாம் கொண்டுவரத் தெளிவான கட்டளையுமில்லையே!
விளைவு? (அப் 5:1-11) ... உடனே குழி!

- வாரியிறைத்தும் தங்களை வெளிக்காட்டாத உயர்ந்த மனிதர் இன்றும் இருக்கத்தான் செய்கிறார்கள் —

(உ-ம்) ஆசீர்வாத இளைஞர் இயக்கத்தின் (BYM) தலைமைக் கட்டிடம், துணைக் கட்டிடம், மிஷனரிகள் இளைப்பாறும் இல்லங்கள் ஆகியவற்றிற்குத் தாராளப் பணவுதவி செய்தவர் தனது புகைப்படம்கூட வைக்கப்பட அனுமதிக்கவில்லை. BYMஇன் எந்தக் கட்டிடத்திலும் பெருமளவில் உதவி செய்தவர் அல்லது கட்டிடத்தைத் திறந்துவைத்தவர் பெயர் பொறிக்கப்படுவதேயில்லை — இது ஒரு கொள்கை.

இவர்களால் எப்படி இவ்விதம் இருக்க முடிகிறது?

எபி 6:10இன் வாக்கை விசுவாசிப்பதாலேயே —

*''அன்பின் உழைப்பை மறக்க ஆண்டவர் நீதியற்றவரல்ல!''*

இதற்கு மேல் என்ன வேண்டும்?

- பெருந்தொகையைக் காணிக்கையாகப் பிரபல பிரசங்கிமார் கையில்தான் கொடுக்க விரும்புவது இயல்புதான்;

  பவுல் அதை எவ்விதம் தவிர்த்தான் பாருங்கள் —

  1 கொரி 16:1,2 ... *நான் வரும்போது சேகரிப்பு இல்லாதபடி ...*

- நாம் விளம்பரத்தை இச்சிப்பதேன்?

**''நமது''** பணத்தில்தான் நிறைய கொடுத்ததாய் நினைக்கிறோம் —

தவறு! முற்றும் தவறு!

1 நாளா 29:12-14 ... *எல்லாம் உம்மால் உண்டானது ...*

*உமது கரத்தில் வாங்கி உமக்குக் கொடுக்கிறோம்*

கொடுப்பதில் நாம் கடவுளை மிஞ்ச முடியாது!

அவர் ஒருவருக்கும் கடனாளியுமல்ல!

**எப்படிக் கொடுக்கக்கூடாது?**

## 10. பெற்றுக்கொள்ளவே கொடுக்கக்கூடாது.

Do not give just to receive.

■ சரியாய்ச் சொன்னால்,

கடவுளுக்கு நம்மிடமிருந்து எதுவுமே தேவையில்லை —

ப.ஏ. — சங் 50:10-13 ... ஆசாபின் சங்கீதம்

*''உலகமும் அதின் நிறைவும் எனது''*

பு.ஏ. — அப் 17:24,25 ... அத்தேனேயில் பவுல்

*''அவருக்கு எதுவும் தேவையில்லை ... எல்லாம் கொடுக்கிறவர்''*

■ கொடுப்பது தேவனை ஆராதிக்கவும்

அவருக்குத் துதி பாடவுமே:

— உபா 16:16,17 ... *பண்டிகை ... பண்டிகை ... கொண்டுவரட்டும்*

— அண்ட சராசரத்திற்கும் தேவனே சொந்தக்காரர் என்று

சங் 50:12 சொல்லுகிறது!

எனவே *''கூப்பிடு ... மகிமைப்படுத்து ...''* (வச 15)

— பிலி 4:18 ... *''உங்கள் காணிக்கை ... சுகந்தது ... உகந்தது ...''*

வாசனைத் தைலத்தை இயேசுவின்மீது ஊற்றிய

மரியாளின் மனப்பான்மை இதுவே —

மாற் 14:6,8 ... *நற்செயல் ...*

***அடக்கம்பண்ண*** *உடலில் தைலம் பூச ...*

மற்ற பெண்கள் **அடக்கம்பண்ணியபின்** வந்தனர்.

மரியாள் *''முந்திக்கொண்டாள்!''*

கடவுளுக்கு இன்று கொடுக்கக்கூடியதை ஒத்திப்போடாதீர்!

■ பழைய ஏற்பாடு vs. புதிய ஏற்பாடு

யேகோவாவுக்கும் விக்கிரகங்களுக்கும் இடையே

அன்றைய யூதரின் விசுவாசம் ஊசலாடிக்கொண்டிருந்தது.

மலையிலிருந்து மோசே இறங்கிவரத் தாமதம் ஏற்பட்டதும்

ஒரு பொற்கன்றுக்குட்டி செய்து —

*''இஸ்ரவேலரே, உங்களை எகிப்திலிருந்து அழைத்துவந்த*
*உங்கள் தெய்வம் இதுவே!''* என்று பாடினர் (யாத் 32:4ஆ)
நினைத்தும் பார்க்க முடியாதது!

இவ்வித மக்களை விசுவாசத்தில் பிடித்துவைக்கக் கடவுள்
பல ஆசிகளை வாக்குப்பண்ணி நயங்காட்ட வேண்டியிருந்தது.
அதில் ஒரு வாக்குதான் —

மல் 3:8-10 ... *தசமபாகம் ... வானத்தின் பலகணிகள்*

அன்று நிலவிய நிலை —

*''நாடு முழுவதும் ஆண்டவரை ஏமாற்றியது''* (வச 9)
*''இஸ்ரவேலில் அருவருப்பு''* (2:11)

☐ ஆசிகளும் பெரும்பாலும் பொருளாதார நன்மைகளே (மல் 3:10ஆ).

புதிய ஏற்பாட்டிலோ, பிரதானமாக *''ஆன்மீக'' ஆசிகள்* —
2 கொரி 9:10 ... *நீதி*
:11 ... *ஸ்தோத்திரம்* = துதி
:12 ... *ஸ்தோத்திரம்* = ஆராதனை
:13 ... *''தேவனை மகிமைப்படுத்தி ...''*

**பெறுவதற்காக** அல்ல,
*''சொல்லி முடியா ஈவைப்''* **பெற்றதற்காகவே**
நாம் கொடுக்கிறோம் (வச 15)

■ இப்படிச் சொல்வதால்,
கடவுள் நமக்குப் பொருளாதார ஆசிகள் தரமாட்டார் என்பதல்ல —
நமது அடிப்படைத் தேவைகளை அவர் சந்திக்க எதிர்பார்க்கலாம்;
ஆனால் நமது நித்திய நோக்கு
பொருளாதாரச் சிந்தைக்குமேல் தலைதூக்கியிருக்கவேண்டும் —

☐ *''பரலோகில்''* பொக்கிஷங்கள் (மத் 6:19-21)
☐ *''நித்தியமான''* வீடுகள் (லூக் 16:9)
☐ *''மகிமையில் ஐசுவரியம்''* (பிலி 4:19)

- நான் கொடுப்பதைத் தேவன் ''வாங்குகிறாரே!''
  நான் கொடுப்பதற்கு அவர் தரும் ''பலன்களைவிட''
  
  இதுதான் மகிமையான காரியம்!

  எனவேதான் அப் 20:35ஆ —
  
  *''வாங்குவதைவிடக் கொடுப்பதே பாக்கியம்!''*

- இச்சத்தியத்தைக் கிறிஸ்தவர்கள் புரிந்துவிட்டால்,
  கிறிஸ்தவத்தைப் பிரசங்கிமார் வணிகமயமாக்குவது
  அடியோடு நின்றுவிடும்!